முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (29.11.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.46.50 கோடி நிதி பங்களிப்புடன் கட்டப்பட்டு வரும் திருவெற்றியூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் அரசு தொழில் பயிற்சி நிலையத்தின் முன்னேற்றப் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் திருமதி.ஜெ. இன்னசென்ட் திவ்யா, மண்டலக் குழுத்தலைவர் தனியரசு, சிஎம்டிஏ தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, தொழில்நுட்பக் கல்வி இயக்கக உதவி இயக்குநர் (திட்டம்) திருமதி.சியாமளா, செயற்பொறியாளர் திருமதி.துர்கா, சிஎம்டிஏ மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

ரூ.46.50 கோடி நிதியில் நடைபெறும் திருவொற்றியூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரி –

அரசு தொழில் பயிற்சி நிலையத்தின் முன்னேற்றப் பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

சென்னை, நவ. 30-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (29.11.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூபாய் 46.50 கோடி நிதி பங்களிப்புடன் கட்டப்பட்டு வரும் திருவெற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள திருவெற்றியூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் அரசு தொழில் பயிற்சி நிலையத்தின் முன்னேற்றப் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தாவது:

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய அறிவுறுத்தலின்படி, மாவட்டச் செயலர் திரு.சுதர்சனம் அவர்களின் கோரிக்கையை ஏற்று, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியின் பலனாக, மண்டலக்குழுத் தலைவர் அவர்கள் முன் வைத்த வேண்டுகோளை ஏற்று, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வாயிலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

இந்த திட்டத்தின் அடிப்படையில் ரூ.46 கோடி செலவில் திருவெற்றியூரில் ஒரு தொழிற்பயிற்சி நிலையமும் (ஐ.டி.ஐ), ஒரு தொழில்நுட்பக் கல்லூரியும் அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. தற்காலிகமாகப் பல்வேறு கல்விக் கட்டிடங்களில் பயின்றுவரும் மாணவச் செல்வங்கள், இந்த புதிய கட்டடங்கள் முடிந்தவுடன் அங்கேயே நிலையான கல்வியைப் பெறுவர்.

இக்கட்டுமானப் பணிகள் தொடர்பாக 2026 பிப்ரவரி மாத இறுதிக்குள் முழுமையாக நிறைவு பெறும் வகையில் காலக்கெடு வரையறுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பணியாளர்களை கூட்டி பேசி, பணியின் வேகத்தை அதிகரிக்கத் தேவையான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர், தலைமைப் பொறியாளர் மற்றும் உயர்கல்வித் துறையின் பொறியாளர்கள் ஆகியோர் இணைந்து கட்டிடத்தின் வலிமை, தரம், முடியும் நாள் ஆகியவற்றை நேரடியாக ஆய்வு செய்து வருகின்றனர்.

இதன் மூலம் திருவொற்றியூர், ஆர். கே. நகர், மாதவரம் போன்ற பகுதிகளில் வசிக்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மாணவ, மாணவிகளுக்கு மிகப்பெரிய கல்வி வாய்ப்பு உருவாகும் என்பது நிச்சயம்.

வரும் கல்வியாண்டுக்குள் மாணவர்கள் மாற்றப்படுவார்களா?

நிச்சயமாக. இந்த கல்வியாண்டிற்குள்ளேயே கட்டடப் பணிகள் முழுமையடைந்து, மாணவச் செல்வங்கள் நிலையான, பாதுகாப்பான, அனைத்து வசதிகளுடனான புதிய கல்விக் கட்டிடத்தில் பயிலும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நூலகங்கள் மற்றும் 'முதல்வர் படைப்பகம்' நிலை

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் நூலகங்களும், 'முதல்வர் படைப்பகம்' உருவாக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இது வரை மூன்று முதல்வர் படைப்பகங்கள் மற்றும் நூலகங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டிற்குள் மொத்தம் 10 நூலகங்களை ஏற்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 2026 பிப்ரவரி மாதத்திற்குள் மேற்கொண்ட 'முதல்வர் படைப்பகம்' பணிகளில் 70 சதவீதத்திற்கும் மேலான பகுதி நிறைவடையும். இத்திட்டம் முதலமைச்சர் அவர்களின் கற்பனைத் திட்டமாக உருவானது.

ஆர். கே. நகரில் இரண்டு இடங்களில் 'முதல்வர் படைப்பகம்', கொளத்தூரில் நூலகத்துடன் இணைந்த படைப்பகம்', உயர்நிலைத் தேர்வுகளுக்கான (ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற) பயிற்சி மையம் என்பன வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. நாள்தோறும் 450 மாணவர்கள் இப்படைப்பகத்தில் படித்து வருகின்றனர். வீட்டிலேயே படிப்பதற்கான அமைப்பு இல்லாத மாணவர்களுக்கு இது அரிய கல்வி வாய்ப்பாக அமைந்துள்ளது. உயர்நிலைத் தேர்வுகளுக்கான பயிற்சியில் 120 மாணவர்கள் இரண்டு தவணைகளாகப் பயின்று வருகின்றனர்.

எங்கள் துறையின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்கள், உறுப்பினர் செயலாளர் பிரகாஷ் அவர்கள், தலைமைப் பொறியாளர் ஆகியோர் தினமும் களத்தில் இறங்கி இந்தப் பணிகள் அனைத்தையும் ஆராய்ந்து வருகின்றனர்.

இன்றைய மழை எச்சரிக்கை குறித்து

நேற்று முதலமைச்சர் அவர்கள், சென்னை, எழிலகத்தில் அமைந்துள்ள தலைமை கட்டுப்பாட்டு அறைக்குச் சென்று, பேரிடர் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்தார். புயல், கனமழை, வெள்ளம் போன்ற இயற்கைச் சூழல்களை எதிர்கொள்ள அனைத்து துறைகளும் தயார் நிலையில் உள்ளன என்று அவர் உறுதிப்படுத்தினார். மேலும் ஆரஞ்சு மற்றும் சிவப்பு எச்சரிக்கை அளிக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் காணொளி காட்சி வாயிலாக ஆலோசனையில் கலந்துகொண்டு, தேவையான வழிமுறைகளைச் சொன்னார். மக்களின் பாதுகாப்பு என்ற ஒரேயொரு நோக்கத்துடன் செயல்படும் இந்த அரசு, போர்க்கால வேகத்தில் அனைத்து நிவாரணப் பணிகளையும் மேற்கொள்ளும் என்பதை வலியுறுத்தி தெரிவிக்கிறேன். இவ்வாறு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் திருமதி.ஜெ. இன்னசென்ட் திவ்யா, மண்டலக் குழுத்தலைவர் தனியரசு, சிஎம்டிஏ தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, தொழில்நுட்பக் கல்வி இயக்கக உதவி இயக்குநர் (திட்டம்) திருமதி.சியாமளா, செயற்பொறியாளர் திருமதி.துர்கா, சிஎம்டிஏ மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

மறைந்த கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் துணை நிற்கும் என்ற நோக்கில் கழக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் வழிகாட்டுதலுடன், நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம் ஆகிய தொகுதிகளில் கடந்த ஓர் ஆண்டு காலத்தில் மறைந்த 1051 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்திற்கு கலைஞர் குடும்ப நலநிதியாக ரூ.1 கோடியே 51 லட்சம் நிதியை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், வெண்ணந்தூர் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.எம்.துரைசாமி, பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.எஸ்.எஸ்.ராஜேஷ், கே.கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி கூட்ட அரங்கில்

87வது வேளாண் விஞ்ஞானிகள் - விரிவாக்க அலுவலர்களுக்கான கருத்தரங்கம்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ. 30-

சென்னை, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி கூட்ட அரங்கில் 28.11.2025 அன்று நடைபெற்ற 87வது வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்களுக்கான கருத்தரங்கத்தை வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசின் வேளாண்மை - உழவர் நலத் துறையின் கீழ் இயங்கிவரும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், வேளாண்மைப் பொறியியல், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு, சர்க்கரைத்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை ஆகிய துறைகள் மூலம் தமிழ்நாடு அரசின் உழவர் நலன் சார்ந்த திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் வெளியிடப்படும் புதிய பயிர் இரகங்கள், நவீன சாகுபடி உத்திகள், விவசாயிகள் சந்தித்துவரும் களப் பிரச்சனைகளுக்கான தொழில்நுட்ப தீர்வுகள் விவசாயிகளிடையே வேளாண் விரிவாக்க அலுவலர்களால் கொண்டுசெல்லப்படுகிறது.

இதனை மேம்படுத்தும் வகையில் மாவட்ட அளவில், வேளாண் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இணைந்து கருத்து மற்றும் தகவல் பரிமாற்றம் மேற்கொள்ளும் வகையில் மண்டல வேளாண் பணிமனை மாதந்தோறும் நடத்தப்படுகிறது. இவ்வாறு நடத்தப்படும் கருத்துப்பரிமாற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்படும் பொருண்மைகள் மற்றும் வேளாண்மையில் ஏற்படும் முக்கிய சவால்களுக்கு தீர்வுகண்டு அதனை விவசாயிகளுக்கு எடுத்துச் செல்லும் நோக்குடன் மாநில அளவில், "வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் கருத்தரங்கம்" நடத்தப்படுகிறது. அவ்வகையில் 28.11.2025 அன்று சென்னை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்ற 87வது வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் கருத்தரங்கத்தினை மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தொடங்கி வைத்து தலைமை உரை ஆற்றினார்.

காலநிலை மாற்றங்களால் வேளாண் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படா வண்ணம் உகந்த மண்வள பாதுகாப்பு, பயிர் முறை, விதைப்பு, நீர்ப் பாசனம் மற்றும் உரங்களை திட்டமிடுதல், களையெடுத்தல், பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள், அறுவடை, காப்பீடு போன்றவற்றை விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்கும் பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் விரிவாக்க அலுவலர்களுடன் கலந்தாலோசித்து உகந்த திட்டங்கள், உத்திகளை சரியான நேரத்தில் உருவாக்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சிக்கு வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும், விரிவாக்க அமைப்பின் பல்வேறு தேவைகளை ஆராய்ந்து, விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு பொருத்தமான அறிவியல் தீர்வை உருவாக்குமாறு வேளாண் விஞ்ஞானிகளுக்கு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பயிர் இரகங்கள்தான் விவசாயிகளால் பெரிதும் விரும்பப்பட்டு இன்றளவும் பயன்பாட்டில் உள்ளன. எனினும் 10 ஆண்டுகளுக்கும் குறைவாக சமீப காலங்களில் வெளியிடப்பட்ட பயிர் இரகங்கள் வணிக ரீதியாக சந்தைகளில் மிகுந்த வரவேற்பினை பெறவில்லை எனவே, தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம், காலநிலை மாற்றத்திற்கேற்ற சிறந்து விளங்கும் வகையில், சந்தையில் பெரிதும் விரும்பப்படும் பண்புகளுடன் உயர்விளைச்சல் இரகங்களை உருவாக்க வேண்டும் என்றும், குறிப்பாக தோட்டக்கலைப்பயிர்களில் புதிய இரகங்களை உருவாக்கிடவும், சிறியவகை அறுவடை இயந்திரங்கள், வேளாண் கருவிகளை உடனடியாக உருவாக்கிடவும், விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்கு தலை ஆராய்ந்து விரிவுபடுத்திடவும், மதிப்புக் கூட்டுதல், பதப்படுத்துதல் போன்றவற்றில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் வேளாண்மையில் ஏற்படுத்தப்பட்ட அரசின் சாதனைகளை விவசாயிகளுக்கு தெரிவித்திடவும், கடந்த 10 ஆண்டுகளில் 2012-2013 முதல் 2020-2021 வரை சராசரியாக 1.36 சதவீதமாக இருந்த வேளாண் வளர்ச்சி 2021 முதல் 2024 வரை சராசரியாக 5.66 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும், கரும்பில் பொக்கபோயிங் மற்றும் மஞ்சள் இலை நோய், உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய், மக்கச்சோளம் மற்றும் பருத்தியில் படைப்புழு தாக்குதல், தென்னையில் வேர்வாடல் நோய், வெள்ளை ஈக்கள் போன்று பல்வேறு பயிர்களில் ஏற்படும் பூச்சி, நோய்த் தாக்குதல்களுக்கு உடனடி தீர்வு காணவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இத்தகைய கருத்தரங்குகள் ஆண்டுதோறும் நடத்தப்படும் என்றும், விவசாயிகள் தங்களது களப்பிரச்சனைகளை நேரடியாக தெரிவித்து தீர்வுகாணும் பொருட்டு, வேளாண் விஞ்ஞானிகள், வேளாண் விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகள் அடங்கிய இணைப்புக்கூட்டங்கள் நடத்தப்படும் என்றும், இக்கூட்டங்களில் அனைத்து வகையாக பிரச்சனைகளையும் விரிவாக விவாதித்து, வேளாண் பெருமக்களுக்கு மதிப்புமிக்க பங்களிப்பை வழங்குமாறு மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வேளாண் விஞ்ஞானிகளையும், விரிவாக்க அலுவலர்களையும் கேட்டுக்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து மாவட்ட அளவில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி, உயர்விளைச்சல் இரகங்கள், மண்வளம், உரப்பரிந்துரைகள், பூச்சி நோய் தாக்குதல் மற்றும் மேலாண்மை முறைகள், மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்துதல், அறுவடை இயந்திரங்கள், வேளாண் கருவிகள், விளைபொருட்களை சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி செய்தல், வேளாண் சந்தை நுண்ணறிவு, சந்தைவிலை நிலவரங்கள் போன்ற பல்வேறு செயல்பாடுகளில் விவசாயிகளின் தேவை மற்றும் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் துறையின் மாவட்ட அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. இதற்குரிய தீர்வுகள் ஆராய்ச்சிப்பணிகள் மூலம் கண்டறியறியப்பட்டு வெளியிடப்படும் என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் தெரிவித்தார்.

மேலும், முன்னர் நடைபெற்ற கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட பல்வேறு கருத்துகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அதற்குரிய தீர்வுகள், புதிய பயிர் இரகங்கள், உயர் தொழில்நுட்பங்கள், மேலாண்மை முறைகள், வடிவமைக்கப்பட்ட இயந்திரங்கள், கருவிகள், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவற்றை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்திட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த கருத்தரங்கில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ. தட்சிணாமூர்த்தி வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலைத்துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பொறுப்பு துணைவேந்தர் முனைவர். ஆர். தமிழ்வேந்தன், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப்பொறியாளர் முனைவர். ஆர். முருகேசன் மற்றும் துறை சார்ந்த மாவட்ட மற்றும் மாநில அளவிலான உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் கடந்த ஓர் ஆண்டில் மறைந்த

கழக உறுப்பினர்கள் 1051 பேரின் குடும்பத்தினருக்கு - கலைஞர் குடும்ப நல நிதி!

ரூ.1 கோடியே 51 லட்சம் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், நவ. 30-

மறைந்த கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் துணை நிற்கும் என்ற நோக்கில் நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம் ஆகிய தொகுதிகளில் கடந்த ஓர் ஆண்டு காலத்தில் மறைந்த 1051 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்திற்கு கலைஞர் குடும்ப நலநிதியை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களில் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தும் போராட்டங்களில் ஈடுபட்டு வயோதிகம் காரணமாகவோ, உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலோ, விபத்தினாலோ, தவிர்க்க முடியாத காரணத்தினாலோ மறைந்த கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு, கழக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் வழிகாட்டுதலுடன் கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்பேற்றது அன்று முதல் மறைந்த கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதி என்ற பெயரில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கி வருகிறார்.

அதன்படி, நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம் ஆகிய தொகுதிகளில் ஒன்றிய நகர பேரூர் வாரியாக மறைந்த கழக உறுப்பினர்கள் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நலநிதி வழங்கப்பட்டுள்ளது.

அதில் நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் நாமக்கல் கிழக்கு நகரத்தில் 16, நாமக்கல் மேற்கு நகரத்தில் 32, நாமக்கல் தெற்கு நகரத்தில் 23, நாமக்கல் ஒன்றியத்தில் 69, மோகனூர் ஒன்றியத்தில் 73, புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியத்தில் 44, புதுச்சத்திரம் வடக்கு ஒன்றியத்தில் 35, மோகனூர் பேரூரில் 37 என மறைந்த கழக உறுப்பினர்கள் 329 பேர் குடும்பத்திற்கும்,

ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் ராசிபுரம் நகரத்தில் 29, ராசிபுரம் ஒன்றியத்தில் 46, நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் 62, அத்தனூர் பேரூரில் 10, இரா. புதுப்பட்டி பேரூரில் 10, பட்டணம் பேரூரில் 12, பிள்ளாநல்லூர் பேரூரில் 25, வெண்ணந்தூர் ஒன்றியத்தில் 110, வெண்ணந்தூர் பேரூரில் 28, அத்தனூர் பேரூரில் 10 என மறைந்த கழக உறுப்பினர்கள் 332 பேர் குடும்பத்திற்கும்,

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேந்தமங்கலம் ஒன்றியத்தில் 70, கொல்லிமலை ஒன்றியத்தில் 39, சேந்தமங்கலம் பேரூரில் 34, எருமப்பட்டி ஒன்றியத்தில் 164, எருமப்பட்டி பேரூரில் 7, சிராப்பள்ளி பேரூரில் 13, நாமகிரிப்பேட்டை பேரூரில் 36, காளப்பநாயக்கன்பட்டி பேரூரில் 19 மறைந்த கழக உறுப்பினர்கள் என 382 பேர் குடும்பத்திற்கும் என ஆக மொத்தம் மறைந்த கழக உறுப்பினர்கள் 1051 குடும்பத்திற்கு ரூ 1 கோடியே 51 லட்சம் மதிப்பிலான முத்தமிழ் அறிஞர் கலைஞர் குடும்ப நலநிதியை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

வெண்ணந்தூர் ஒன்றியத்தில் மசக்காளிப்பட்டி ஸ்ரீவாரி மஹாலில் வெண்ணந்தூர் ஒன்றியம் மற்றும் அத்தனூர் பேரூரில்மறைந்த கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி முத்தமி ழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கும் நிகழ்ச்சி யில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஒன்றிய கழக செயலாளர் ஆர்.எம்.துரைசாமி, அத்தனூர் பேரூர் கழக செயலாளர் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் மறைந்த கழக உறுப்பினர்கள் 118 பேர் குடும்பத்திற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார்.

அதேபோல் வெண்ணந்தூர் பேரூர் பகுதியில் மறைந்த கழக உறுப்பினர்கள் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கும் நிகழ்ச்சி யில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஒன்றியக் கழக செயலாளர் ஆர்.எம்.துரைசாமி, வெண்ணந்தூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.எஸ்.எஸ்.ராஜேஷ் ஆகியோர் முன்னிலையில் மறைந்த கழக உறுப்பினர்கள் 28 பேர் குடும்பத்திற்கு முத்தமிழறி ஞர் கலைஞர் குடும்ப நலநிதியை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார்.

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 (அ) வது வட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனைப்படி, தயாநிதி மாறன் எம்.பி, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ, ச.பரமசிவம், கார்த்திக் மோகன் ஆகியோர் வழிகாட்டுதல்படி, வட்டச் செயலாளர் சி.பி.திருமலை தலைமையில் மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி, 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் கழகக் கொடி ஏற்றி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. உடன் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி, பூண்டி ஒன்றியம், கச்சூர் விவேகானந்தா விஷன் சி.பி.எஸ்.சி பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து பல்வேறு மருத்துவ பாரிசோதனைகள் பார்வையிட்டு துறை அதிகாரிகளிடம் இணைந்து பயனாளிகளுக்கு மருத்துவ சேவை வழங்குமாறு டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்தார். உடன் டி.கே.சந்திரசேகர், ஜான் (எ) பொன்னுசாமி, மு.கதிரவன், எஸ்.ரமேஷ், அப்துல்ரஷீத், மு.கேசவன், நா.சீனிவாசுலு, ஆர்.ரகு, கே.பாபு, ஸ்ரீராமுலு, தில்லைகுமார், சுதாகர், சித்ராபாபு, வேல்முருகன், ராகவன், எல்.சிவ்வய்யா, எஸ்.சாந்தகுமார், கே.விஜயன், கோல்டு. மணி, பி.கே.நாராயணசாமி, டார்த்தி, லைலா, எஸ்.என்.சாய்குமார், கோகுலகிருஷ்ணன், ஹரிஹரன், ரஹீம், ஜி.சுதாகர். பால்சுதாகர், யுகேந்திரன், புருஷோத்தமன், யோவன், ஏட்வர்டு.துரை, தீலிப், பிரபாகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.